பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 219

வெள்ளிக்கிழமை
03 ஜூலை 2026

ஆனி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணையை திசைதிருப்புவதற்குச் சதிமுயற்சி!

## கம்மன்பில, விமல் உள்ளிட்ட ஆறு பேருக்கு இறுகுகிறது பிடி





கொழும்பு, ஜூலை 3

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் இடம்பெறும் விசாரணைகளைத் திசைதிருப்புவதற்கு சதிசெய்தனர் என்ற குற்றச்சாட்டில், கம்மன்பில, விமல் வீரவன்ஸ, திலித் ஜயவீர உள்ளிட்ட ஆறு பேருக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

»11



## மடுத்திருத்தலத்தில் நேற்று ஆடித்திருவிழா பக்திபூர்வம்

மன்னார், ஜூலை 3

மன்னார் மடுத்திருத்தலத்தின் ஆடிமாதத் திருவிழா ஆயிரக் கணக்கான மக்களின் பங்கேற்புக்கு மத்தியில் நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்

»11

வடமராட்சி கிழக்கு

## மணற்காட்டில் விபத்து; 5 பேருக்குக் காயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்கு உள்ளானதில் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட ஐந்து பேர் காயமடைந்தனர்.

»11

## தங்கத்தின் விலை சடுதியாக உயர்வு

விரிவு பக்கம்:- 03

## கைது நடவடிக்கைக்கு பணியாதாம் பெரமுன!



கொழும்பு, ஜூலை 3

திசைகாட்டி அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் கைது நடவடிக்கை எதற்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பணியாது என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சானக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை அடக்கி

»11

முன்னாள் அமைச்சர்

## சந்திரசேன மீது குற்றப்பத்திரிகை



கொழும்பு, ஜூலை 3

முன்னாள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனவுக்கு எதிராக ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்றுக் குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டுள்ளது. கையூட்டல் மற்றும் ஒழிப்பு ஆணைக் குழுவால் தாக்

»11

யாழ்ப்பாணம் மாவட்ட

## கூட்டுறவு உதவி ஆணையாளரின் இடமாற்றம் அரசியற்பழிவாங்கலே

### யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமையாற்றும் கி.சந்திரசேகரனுக்கு வழங்கப்படவுள்ள இடமாற்றம் அரசியற் பழிவாங்கலின் வெளிப்பாடே என்று யாழ்ப்பாணம்

»11

நாடாளுமன்ற உறுப்புரிமை விவகாரம்

## அர்ச்சுனாவுக்கு எதிரான வழக்கை விசாரணைக்கு எடுக்கத் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 3

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிப்பதற்கான தகைமையைச் சவாலுக்கு உட்படுத்தித் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை விசாரணைக்கு எடுப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

புதிய சுதந்திர முன்னணியின் தலைவர் ஓஷத ஹேரத் என்பவரால் தாக்

»11

## இறைச்சிக்காக பசு திருட்டு; மூவர் வவுனியாவில் கைது!



வவுனியா, ஜூலை 3

வவுனியா - மாமடுவ பகுதியில் இறைச்சிக்காக பசுவொன்றைத் திருடி விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் சிவில் பாதுகாப்புப் படைவீரர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கன்றுத்தாய்ச்சிப் பசுவொன்று திருடப்பட்டதாக

»11

## மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துங்கள்

### மக்களின் விருப்பத்தை அறிய அதுவே வழி

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 3

வடமாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விவசாயியை வளப்படுத்தி,

»11

## உயர்நடுத்தர நாடாக இலங்கை தரமுயர்வு

### உலக வங்கி அறிவிப்பு

## செல்லப்பிராணிகளுக்கு வருகிறது புதிய சட்டம்!

விரிவுகள் பக்கம்:- 02

முச்சந்தி முரளி

"பல நாள் திருடர் ஈஸ்டரிலையாவது பிடிபட்டால் எல்லாருக்கும் சந்தோசம் தான் கண்டியளோ"

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 02.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4478 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 26 50 55 65 |
| விசேட எழுத்து | N |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 02.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1545 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 18 33 50 58 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 02.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0504 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 0 2 5 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 02.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2584 |
| ஆங்கில எழுத்து | N |
| சுப்பர் இலக்கம் | 19 |
| வெற்றி இலக்கங்கள் | 06 10 18 57 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 02.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6236 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 9 1 3 9 2 9 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 02.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2266 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 04 07 12 81 |
| விசேட எழுத்து | E |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 02.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0352 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 50 56 58 |

# மீண்டெழுந்தது இலங்கை தரமுயர்த்தியது உலக வங்கி

கொழும்பு, ஜுலை 3

**உலக வங்கியால் வெளியிடப்பட்ட உலக நாடுகளுக்கான சமீபத்திய பொருளாதார வருமான வகைப்பாட்டுக்கமைய, இலங்கை மீண்டும் ஒருமுறை 'உயர்மத்திய வருமானம் பெறும் நாடு' என்ற அந்தஸ்த்துக்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளது.**

கடந்த 2022ஆம் ஆண்டில் இலங்கை சந்தித்த மிக மோசமான பொருளாதார நெருக்கடி, கடுமையான அந்நியச் செலாவணி தட்டுப்பாடு மற்றும் இறையாண்மைக் கடன் நெருக்கடி காரணமாக நாட்டின் பொருளாதாரம் மிகக் கடுமையாக வீழ்ச்சியடைந்தது. இதனால் இலங்கை நடுத்தர வருமான மட்டத்திலிருந்து கீழ் நோக்கிய வருமானப் பிரிவுக்குத் தள்ளப்பட்டது.

இருப்பினும், அந்தப் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து வெறும் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, அதாவது 2025ஆம் ஆண்டாகும்போது இலங்கையின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 5% என்ற குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டியுள்ளதாக உலக வங்கியின் 'அபிவிருத்தித் தரவுக்குழு' சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கை இம்முறை மிகக் குறுகிய எல்லைக்குள் இந்த வருமான இலக்கைத் தாண்டியுள்ளதாக உலக வங்கி குறிப்பிட்டுள்ள போதிலும், நாட்டின் பொருளாதாரத்தை இயல்பு நிலைக்குக் கொண்டுவந்ததில் உற்பத்தி மற்றும் கைத்தொழிற்றுறைகள், சுற்றுலா மற்றும் நிதிச் சேவைகள், நாட்டின் மொத்தத் தேசிய வருமானத்தை உயர்த்த உதவியுள்ளன.

ஒவ்வொரு வருடமும் ஜுலை முதலாம் திகதி உலக வங்கி இந்த வகைப்பாட்டை வெளியிடுகிறது.

அதன்படி இலங்கையுடன் சேர்த்து ஜோர்தான், பிலிப்பைன்ஸ், வியட்நாம் மற்றும் மைக்ரோனேஷியா ஆகிய நாடுகளும் இம்முறை உயர்மத்திய வருமானப் பிரிவுக்கு முன்னேறியுள்ளன. (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 02.07.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0944 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 1 3 1 8 6 8 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 02.07.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3210 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கம் | 04 22 29 68 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 02.07.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கம் | 19 22 32 69 |
| வெற்றி வாரம் | 5371 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 02.07.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 1040 |
| வெற்றி இலக்கம் | 04 08 49 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 02.07.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ராசி | ரிஷபம் |
| வெற்றி இலக்கம் | 05 25 32 46 |
| சீட்டிழுப்பு வாரம் | 4922 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 02.07.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| சுப்பர் இலக்கம் | 35 |
| வெற்றி இலக்கம் | 26 29 36 48 |
| வெற்றி வாரம் | 2386 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 02.07.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கம் | 23 25 32 60 |
| வெற்றி வாரம் | 3036 |

## 6 மாதங்களுக்கு நீர்க்கட்டணம் மாற்றமில்லை

கொழும்பு, ஜுலை 3

நடப்பு ஆண்டின் அடுத்த 6 மாத காலப்பகுதிக்கும் நீர்க் கட்டணங்களில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது என வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

ஆண்டின் முதல் 6 மாதங்களில் நீர்ச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக நீர்வழங்கல் சபைக்கு பெருமளவிலான செலவுகள் ஏற்படவில்லை. இதன் காரணமாக நீர்க் கட்டணத்தை அதிகரிக்கவேண்டிய தேவை ஏற்படவில்லை. மின் கட்டணம் 18 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்ட போதிலும், நீர்க் கட்டணத்தின் மொத்தச் செலவில் மின்சாரத்துக்கான பங்களிப்பு 12% மட்டுமே ஆகும். இதன்மூலம் ஒரு நீர் அலகுக்கான செலவு வெறும் 2.50 ரூபா போன்ற மிகக் குறைந்த அளவிலேயே அதிகரித்துள்ளது.

இதனடிப்படையில், கடந்த 6 மாத காலப்பகுதியில் செலவுகள் மிகக் குறைந்த அளவிலேயே அதிகரித்துள்ளதால், பொதுமக்கள் மீது சுமையை ஏற்றாமல் அடுத்த 6 மாதங்களுக்கும் நீர்க் கட்டணத்தை தற்போதைய மட்டத்திலேயே பேண அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



## டித்வா புயல் புனரமைப்புக்காக இந்தியக் கடனுதவி பெற அனுமதி

கொழும்பு, ஜுலை 3

'டித்வா' புயல் அனர்த்தத்தால் இலங்கையில் ஏற்பட்ட அழிவுகளைத் தொடர்ந்து, நாட்டை மீளக் கட்டியெழுப்புதல் மற்றும் புனரமைப்பு வேலைத்திட்டங்களுக்கான மூலதன நிதியாக இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் இந்த யோசனை அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

கடந்த 2025ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இலங்கையைத் தாக்கிய 'டித்வா' புயல் மற்றும் வெள்ளப் பெருக்குக் காரணமாக நாட்டின் 25 மாவட்டங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தன. இதனால் பில்லியன் கணக்கான ரூபா சொத்துச் சேதங்கள் ஏற்பட்டிருந்த நிலையில், இலங்கையின் அண்டை நாடான இந்தியா, புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்கு இந்த மூலதன நிதி உதவியை வழங்க முன்வந்துள்ளது. (ச-இ)




## பஸ்- ஓட்டோ விபத்து இருவர் உயிரிழப்பு!

காலி , ஜுலை 3

காலி-கொழும்பு பிரதான வீதியின் கட்டுக்குருந்த பகுதியில் தனியார் பேருந்துடன் முச்சக்கரவண்டி ஒன்று நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பாட்டி மற்றும் பேரன் ஆகிய இருவர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் முச்சக்கரவண்டியில் வீடுதிரும்பிக்கொண்டிருந்த போதே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த 62 வயதுடைய பாட்டி மற்றும் அவரது 12 வயதுடைய பேரன் ஆகியோர் களுத்துறை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை முச்சக்கரவண்டிச் சாரதி பலத்த காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார்.

விபத்துத் தொடர்பில் பயாகல பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச-இ)

## செல்லப்பிராணிகளுக்கு வருகிறது புதிய சட்டம்!

*அமைச்சரவை அனுமதி*

கொழும்பு, ஜுலை 3

நாட்டில் விசர் நாய்க்கடி நோயை முற்றாக இல்லாதொழித்தல் மற்றும் வீடுகளில் வளர்க்கப்படும் செல்லப்பிராணிகளைப் பதிவு செய்வதற்கான புதிய சட்டவரைவை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், அதனை நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிப்பதற்குமான யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்தப் புதிய சட்டம் நடைமுறைக்கு வரும் பட்சத்தில், பொது இடங்களில் அலைந்து திரியும் நாய்களினால் ஏற்படும் விசர் நாய்க்கடி ஆபத்துகள் குறைக்கப்படுவதுடன், செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் தங்களது பிராணிகளைப் பதிவு செய்து, அவற்றுக்கான தடுப்பூசிகளை முறையாகப் பெற்றுக்கொடுப்பது கட்டாயமாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# மாணவர்கள் மத்தியில் அதிகரிக்கும் எச்.ஐ.வி.!

## அவசர கூட்டுத்திட்டம் ஆரம்பம்

**கொழும்பு, ஜூலை 3**

**கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் தற்போதைய இளைஞர், யுவதிகள் மற்றும் மாணவர்கள் மத்தியில் எச்.ஐ.வி. மற்றும் பாலியல் ரீதியாகப் பரவக்கூடிய நோய்களில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது என்றும் இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கும், பரவலைத் தடுப்பதற்கும் அரசாங்கம் பல்துறை கூட்டுத் திட்டங்களை அவசரமாக ஆரம்பித்துள்ளது என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**


அவர் மேலும் தெரிவிக்கையில், சுகாதாரப் புள்ளிவிவரங்களின்படி, குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பாடசாலை மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் இந்தத் தொற்றுக்கு உள்ளாகியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை கவலைக்குரிய விடயமாகும். இந்த விவகாரம் மிகவும் தீவிரமான கவனம் செலுத்தப்படவேண்டிய ஒன்று என்பதால், அரசாங்கம் உடனடியாகப் பல்துறை ரீதியான தலையீடுகளைச் செய்யத் தீர்மானித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக, கல்வி அமைச்சராகவும் செயற்படும் பிரதமர் ஹரிணி அமரசூரியவின் தலைமையில், விசேட உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நடத்தப்பட்டுள்ளது. கல்வித் துறை மற்றும் சமூக நல்வாழ்வுத் துறை ஆகியவற்றை ஒருங்கிணைத்து, இந்த அபாயகரமான போக்கிலிருந்து இளம் தலைமுறையினரைப் பாதுகாப்பதற்கான கூட்டுச் செயற்றிட்டங்கள் இதன்மூலம் வகுக்கப்பட்டுள்ளன. தொற்றுக்கு உள்ளானவர்களில் பெரும்பாலானோர் போதிய விழிப்புணர்வு மற்றும் சரியான புரிதல் இல்லாத காரணத்தினாலேயே இந்த நிலைமைக்கு ஆளாகியுள்ளனர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழக மட்டங்களில் மாணவர்களை இலக்கு வைத்து விசேட விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் இதன்கீழ் முன்னெடுக்கப்படவுள்ளன - என்றார். (ச-இ)

# 5 கிலோ ஹெரோய்ன் வைத்திருந்தவர் கைது

கொழும்பு, ஜூலை 3

மட்டக்குளி பெர்குசன் வீதியில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் நடத்தப்பட்ட சோதனையின்போது, ஐந்து கிலோவுக்கும் அதிக எடையுள்ள ஹெரோய்னுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 40 வயதுடைய சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது சந்தேகநபரிடமிருந்து 5 கிலோ 140 கிராம் ஹெரோய்ன், போதைப்பொருள் கடத்தல் மூலம் ஈட்டப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 50,000 ரூபா பணம் மற்றும் போதைப்பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு கைபேசிகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்குளி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)



# தங்கத்தின் விலை சடுதியாக உயர்வு

கொழும்பு, ஜூலை 3

சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும் நிலையில், உள்நாட்டுச் சந்தையில் தங்கத்தின் விலை நேற்று பவுணுக்கு 5,000 ரூபாவால் அதிகரித்துள்ளதாக அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. 24 கரட் தங்கம் ஒரு பவுண் 379,000 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட நிலையில், இன்று அதன் விலை 384,000 ரூபாவாக அதிகரித்துள்ளது. 22 கரட் தங்கம் பவுண் ஒன்று 353,300 ரூபாவாகவும், விற்பனை செய்யப்படுகிறது. (ச-இ)

# சுற்றுலாவிகள் வருகை ஜூன் மாதத்தில் வீழ்ச்சி



கொழும்பு, ஜூலை 3

கடந்த வருடத்தின் ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடத்தின் ஜூன் மாதத்தில் நாட்டுக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 9.9 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. இதற்கமைய, ஜூன் மாதத்தில் நாட்டுக்கு வருகை தந்துள்ள ஒட்டுமொத்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 138, 241ஆகும் என்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

# அரச அபிவிருத்திப் பணிகளுக்கு 535 வாகனங்கள் கொள்வனவு

கொழும்பு, ஜூலை 3

நாட்டின் பல்வேறு அரச அபிவிருத்தித் திட்டங்களை மற்றும் அத்தியாவசிய களநிலைப் பணிகளை எவ்விதத் தடையுமின்றி வினைத்திறனாக முன்னெடுப்பதற்கு 535 புதிய பயன்பாட்டு வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அந்தந்த நிறுவனங்களில் காணப்படுகின்ற பயன்பாட்டு வாகனங்களில் நிலவுகின்ற பற்றாக்குறை, அரச அபிவிருத்திக் கருத்திட்டங்களை வினைத்திறனாக நடைமுறைப்படுத்தத் தடையாக இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய பயன்பாட்டு வாகனங்களைத் துரிதமாகக் கொள்வனவு செய்வதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)

# அனோஜனுக்கு ஆப்பு!

**தானுண்டு தன்ரபாடுண்டு எண்டு கதிர்காம யாத்திரைக்குப் போனவையோட தானும் சேர்ந்து போகவெளிக்கிட்ட சுப்பிரமணிக்கு, கல்முனையில ஒரு பழக்கடைப் பெடியன் ஒரேயொரு உதைதான் குடுத்தான். அவ்வளவுதான். இப்ப தமிழரும், முஸ்லிம்களும் ரண்டு கன்னையாப் பிரிஞ்சு பேஸ்புக்கிலயும், ரிக்ரொக்கிலையும் கடுமையாக் களமாடிக் கொண்டிருக்கினம். அது ஒருகட்டத்தில எல்லைமீறி, இப்ப சவூதியில அனோஜன் எண்ட பெடியன்ர எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கிப் போட்டுது. சுப்பிரமணிக்கு கல்முனையில உதைஞ்ச பெடியன் ஒரு முஸ்லிம். அதால அவனைப் பற்றி பாதயாத்திரைக்குப் போன இன்னொரு பெடியன், முஸ்லிம்களைப் பற்றி கொஞ்சம் ஓவராக் கதைச்சுப் போட்டான். அதுக்குப் பிறகு முஸ்லிம் பெடியளும் ஆளாளுக்கு கருத்துக்கந்தசாமியாளா மாறி, இப்ப விடாமல் கலையாடிக்கொண்டிருக்கினம். அதில ஒருத்தர் சிவலிங்கத்தை கடுமையான பாலியல் வக்கிரமாச் சொல்ல, அதுக்குப் பதிலடி குடுக்கிறன் எண்டிட்டு சவூதியில வேலை செய்யப்போன அனோஜன் எண்ட இந்தப் பெடியன் நபிகள் நாயகத்தைப் பற்றிக் கேவலமா கொமண்ட்ஸ் போட்டிருக்கிறான். எண்டாலும் பிறகு அது பிழையெண்டு தெரிஞ்சு, மன்னிப்புக் கேட்டு வீடியோவும் அனோஜன் போட்டிருக்கிறான். அப்பிடியிருந்தும் முஸ்லிம் பெடியள் சிலருக்கு மனசு ஆறேலையாம். அதால அனோஜன் போட்ட கொமண்ட்ஸை ஸ்கிரீன் ஷொட் எடுத்து, அரபு மொழியில ட்ரான்ஸிலேட் பன்னி, இஞ் சையுள்ள சவுதி எம்பஸிக்கு முஸ்லிம்கள் சிலர் பெட்டிசம் போட, அப்பிடியே ஆளை சவூதிப் பொலிஸ் பிடிச்சு வழக்கும் போட்டிட்டுது.**

**இத்தனைக்கும் அனோஜனுக்கு அடுத்த மாசம் கலியாணமாம், அதோடு ஆளொரு பட்டதாரி. இப்ப பட்டதாரியளுக்குத்தான் இஞ்ச வேலையே இல்லையே. அதால குடும்ப கஷ்டத்தைப் போக்காட்டுறதுக்காக சவூதிக்கு உழைக்கப் போன இடத்தில தான், இப்பிடி எக்குத்தப்பா கொமன்ட்ஸைப் போட்டு அனோஜன் மாட்டுப்பட்டிருக்கிறான். சவூதி அரேபியாவில இலங்கை மாதிரி கண்டபாட்டுக்கெல்லாம் கதைக்கவோ கருத்துச் சொல்லவோ ஏலாது. அங்க மத நிபந்தனை, இணையவழி ஊடாக மத உணர்வுகளைப் புண்படுத்துறது எண்டதெல்லாம் ஆகப்பெரிய குற்றவியல் தண்டனைக்குரிய விசயங்கள். அதுவும் இப்பிடி நபிகள் நாயகத்தை வக்கிரமாக பேசினால் அந்த நாட்டுச் சட்டத்தின்படி லட்சக்கணக்கில அபராதமும், பல வருசக் கடுங்காவல் சிறைத்தண்டனையும் குடுத்து, பிறகு நாட்டை விட்டே துரத்திடுவாங்கள். அதுக்குப் பிறகு அந்த ஆள் சவூதிக்கு மட்டுமில்ல, வளைகுடா நாடுகள் ஒண்டுக்கும் போகேலாது. முந்தியெண்டால் இப்பிடி நபிகள் நாயகத்தைப் பற்றி கேவலமாக் கதைச்சால் உடன மரண தண்டனைதான். ஆனால் இப்ப உலகநாடுகள் எல்லாம் வெருட்டினதால, சவூதி எடுத்த எடுப்பில மரணதண்டனை விதிக்கிறேலை. அதுதான் இப்போதைக்கு அனோஜனுக்கு ஆறுதலான விசயம்.**

**இப்ப சவூதியில பேஸ்புக்கில நபிகளைக் கேவலமாகக் கதைச்ச அனோஜனை மீட்கிறதுக்குத் தூதரக ரீதியாகவும், வெளிநாட்டு அமைச்சு மூலமாகவும் ஏகப்பட்ட முயற்சிகள் நடக்குதாம். இதுல நல்ல விசயம் என்னவெண்டால், சில முஸ்லிம் பெடியள் கூட 'ஏதோ ஆத்திரத்தில கதைச்சிட்டான், அதுக்காக அவன்ர வாழ்க்கை பாதிக்கப்படக்கூடாது' எண்ட மனிதாபிமான அடிப்படையில அவனுக்கு உதவியள் செய்ய முன்வந்திருக்கினம். இனிமேலாவது 'பேஸ்புக்கில' இப்பிடி எங்கேயோ நடந்த விசயங்களுக்காக பேஸ்புக்கில உப்புப் புளியில்லாமல் சண்டை பிடிக்கிறதை விட்டிட்டு, ஏதும் பிரியோசனமான வேலையளைச் செய்யுங்கோ. உப்பிடி பேஸ்புக்கில வெட்டி வீராப்புக் கதைக்கிற நேரத்துக்கு நாலு தென்னைமரத்த நட்டு தண்ணியை ஊத்தினால் கூட, நாலைஞ்சு வருசத்தில தேங்காயாவது பிடுங்கலாம். ஆனால் இப்பிடி அனோஜன் மாதிரி, ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு எண்ட கணக்கில கண்டபடி கருத்துச் சொல்ல வெளிக்கிட்டால் பொலிஸ் தான் உங்களைப் பிடிக்குமே தவிர வேற எந்தவொரு ஆணியையும் பிடுங்கேலாது கண்டியளோ.**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் 32ஆவது புத்தக அரங்க விழா

யாழ்ப்பாணம், ஜுலை 3

மக்கள் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில், 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் புத்தக அரங்க விழாவின் 32ஆவது நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் தொடர்ந்து 3 நாள்கள், யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெறும். முதல்நாள் மாலை நிகழ்வாக 'ஈழத்து நூல்களை அறிவோம்' என்ற தொனிப்பொருளில் நூல்களின் அறிமுகமும், கலந்துரையாடலும் இடம்பெறும். நிகழ்வில் இரா.சடகோபனின் 'சூழ்ச்சிகளையும் சதிகளையும் கடந்த வரலாறு' நூல் தொடர்பில் இளம் ஆய்வாளர் ப. கோபிநாத், சி.ரமேஷின் 'உயரப் பறக்கும் பறவையின் அனுபவ அடுக்கிலிருந்து' நூல் பற்றி எழுத்தாளர் சு.குணேஸ்வரன் ஆகியோர் அறிமுக உரையை ஆற்றுவர். தொடர்ந்து மாலை 5 மணிக்கு சண் நாடகக்குழுவினரின் தயாரிப்பில் ஆசிரியர் பு.கணேசராசாவின் நெறியாள்கையில், மாவை நித்தியானந்தனின் எழுத்துருவில் உருவான 'முட்டை' மற்றும் குழந்தை ம.சண்முகலிங்கம் எழுத்துருவில் உருவான 'நேரகாலம்' ஆகிய நாடகங்கள் இடம்பெறும். நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள இரண்டாம் நாள் நிகழ்வில் எஸ்.ஜி.கணேசவேலின் 'கணேசவேல் கவிதைகள்' நூல் தொடர்பாக மக்கள் கலை இலக்கியப் பேரவையின் அமைப்பாளர் சோ.தேவராஜாவும், த.கோபாலகிருஸ்ணனின் 'கனகர் கிராமம் அரசியல், சமூக, வரலாற்று நாவல்' பற்றி கலாநிதி ந.இரவீந்திரனும் அறிமுக உரையை ஆற்றுவர். தொடர்ந்து மாலை 5 மணிக்கு சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில், ஆசிரியர் பு.கணேசராசாவின் எழுத்துரு நெறியாள்கையில் 'அரோகரா' மற்றும் 'தலையெழுத்து' ஆகிய நாடகங்கள் இடம்பெறும். நிகழ்வுகளில் மாபெரும் புத்தகக் கண்காட்சியும், மலிவு விற்பனையும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)



# நுண் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் சந்தை

முல்லைத்தீவு, ஜுலை 3

'உலக நுண் சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோரின் சர்வதேச தினத்தை முன்னிட்டு நுண் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு புதிய பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெற்றது. 'தொழில் முனைவோர் உதயம்' எனும் தொனிப்பொருளில் மக்கள் வங்கியினால் குறித்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது. இதில் 40க்கும் மேற்பட்ட தொழில்முனைவோர் கலந்துகொண்டு தங்களின் உற்பத்திப்பொருள்களை சந்தைப்படுத்தினர்.

நிகழ்வில் கரைதுறைப்பற்று உதவிப் பிரதேச செயலாளர், முல்லைத்தீவு கைத்தொழில் மற்றும் அபிவிருத்தித் துறை உதவிப் பணிப்பாளர், கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைத் தவிசாளர், முல்லைத்தீவு உதவி விவசாயப் பணிப்பாளர், புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி, புதுக்குடியிருப்புப் பிரதேச சபை செயலாளர், வன்னி பிராந்தியம் மக்கள் வங்கி உதவிப் பிராந்திய முகாமையாளர், முல்லைத்தீவு மக்கள்வங்கி முகாமையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-41-60)

# பாதயாத்திரைக் குழுவுக்கு ஒன்பதாம் கட்ட நிதியுதவி

அம்பாறை, ஜுலை 3

யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமக்கந்தன் ஆலயம் நோக்கிச் செல்லும் பாதயாத்திரைக் குழுவினருக்கு, சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் ஒன்பதாம் கட்ட நிதியுதவி கடந்த செவ்வாய்க்கிழமை, அம்பாறை தம்பட்டை ஆலடி விநாயகர் ஆலயத்தில் வைத்து வழங்கப்பட்டது.

பாதயாத்திரையில் கலந்துகொண்ட 120 அடியவர்களுக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று நிதி உதவியை வழங்கினார். (க-66)





# வர்த்தகச் சந்தையும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், ஜுலை 3

யாழ்.மாவட்டச் செயலகமும், விதாதா பிரிவும் இணைந்து நடத்திய யாழ்.மாவட்ட வர்த்தகச் சந்தையும் விற்பனைக் கண்காட்சியும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்.மாவட்டச் செயலக வளாகத்தில் இடம்பெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் கண்காட்சியை ஆரம்பித்துவைத்தார்.

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும்வகையிலும், தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தும்நோக்கிலும், அவர்களுக்கான சந்தைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும்முகமாகவும் இந்தக் கண்காட்சிஏற்பாடுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-41-66)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.வியாபாரத்தில் பணியாளர்களாலும், பங்குதாரர்களாலும் சில சங்கடங்களைச் சமாளிக்க வேண்டி வரும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். சிலருக்கு பிள்ளைகள் மூலமும் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படும். மற்றவர்களுடன் வீண் விவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனந்தெரியாத சோர்வு உண்டாகலாம். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்ளவும்.

**கடகம்:** தந்தைவழி உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். தொடங்கிய காரியங்கள் அனுகூலமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார்.

**கன்னி:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் அதற்கேற்ப பணவரவும் இருப்பதால் பிரச்சினை எதுவும் இருக்காது. எதிரிகள்வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**துலாம்:** உற்சாகமான நாள். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** சகோதரவகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும். பிள்ளைகளால் வீண்செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மாலையில் குடும்பத்தினருடன் உற்சாகமாகப் பேசி மகிழ்வீர்கள். எதிரிகள் பணிந்து போவார்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். சிலருக்கு சிறிய அளவில் ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும்.

**கும்பம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முக்கியமான முடிவுகளை ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**மீனம்:** கணவன் – மனைவிக்கிடையே இருந்த கருத்துவேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் ஏற்படும். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


# உண்மையான ஜனநாயகம் என்பது....!

இலங்கையின் மாகாணசபைத் தேர்தல்கள் திட்டமிட்டுக் காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டு வரும் பின்னணியில், வட மாகாணசபையின் அவைத் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் எழுப்பியுள்ள குற்றச்சாட்டு, திசைகாட்டி அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் கொள்கை மீதான சந்தேகத்தை இன்னும் அதிகப்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணம் தெல்லிப்பழை மருத்துவமனையை மத்திய அரசாங்கத்தின் ஆளுகையின் கீழ் கொண்டு செல்வதற்குத் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெடுப்பென்பது, வெறுமனே ஒரு மருத்துவமனை விவகாரமல்ல அது மாகாணசபைகளின் முதுகெலும்பைஒடிக்கும்திட்டமிட்ட ஆக்கிரமிப்பாகும். பாடசாலைகள், மருத்துவமனைகள் மற்றும் முக்கியமான திணைக்களங்களை ஒவ்வொன்றாக மத்தியின் கீழ் பறித்தெடுத்துவிட்டு, இறுதியில் எவ்வித அதிகாரமுமற்ற ஒரு வெற்றுக்கோதாக மாகாணசபைகளை மாற்றி, அதன் பின்னரே தேர்தலை நடத்த அரசாங்கம் சதி செய்கிறதோ என வட மாகாணசபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானத்துக்கு வந்த ஐயம், எல்லோரிடத்தும் தொற்றிக்கொண்டுள்ளது.

மாகாணத்தில் உள்ள மருத்துவமனையை மத்திய அரசின் கீழ் கொண்டு சென்றால் மட்டுமே வசதி வாய்ப்புகளும் அபிவிருத்திகளும் அதிகரிக்கும் என்று கூறப்படும் வாதங்கள் அப்பட்டமான ஏமாற்று வித்தை யாகும். மாகாணசபையின் கீழ் மருத்துவமனையைப் பேணிக்கொண்டே, அதற்குத் தேவையான நிதி மற்றும் நவீன வசதிகளை மத்திய அரசாங்கத்தால் வழங்க முடியும் என்பதற்கான சட்ட ஏற்பாடுகள் எமது அரசியலமைப்பில் தாராளமாகவே உள்ளன. அவ்வாறிருக்க, அதிகாரங்களை கொழும்புக்கு இழுத்தெடுப்பதில் காட்டும் தீவிரம், மாகாணசபை முறையையே அர்த்தமற்றதாக்கும் பேரினவாதச் சிந்தனையின் தொடர்ச்சியன்றி வேறென்ன? காணி, பொலிஸ் அதிகாரங்கள் உள்ளிட்ட 13ஆம் திருத்தச் சட்டத்தின் மூலமான ஆகக்குறைந்த அதிகாரப்பகிர்வைக் கூடத் தமிழ் மக்களுக்கு வழங்கத் தயங்கும் தென்னிலங்கை ஆட்சியாளர்கள், இருக்கும் அரைகுறை நிர்வாக அதிகாரங்களையும் அபகரிக்க முனைவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயலாகும்.

புதியதொரு அரசியல் கலாசாரத்தை உருவாக்கப் போவதாகக் கூறி ஆட்சிப் பீடமேறியுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், முந்தைய ஆட்சியாளர்களின் அதே 'ஒற்றையாட்சி மேலாதிக்கப்' பாதையிலேயே பயணிப்பது ஏமாற்றமளிக்கிறது. நாட்டில் நீண்டகாலமாக புரையோடிப் போயிருக்கும் இனமுறுகலைத் தணிக்க வேண்டுமாயின், அதிகாரங்களை ஒடுக்குவதல்ல; மாறாக அவற்றை அடிமட்டம் வரை பகிர்ந்தளிப்பதே ஒரே தீர்வாகும். எனவே, திசைகாட்டி அரசாங்கம் மாகாணங்களின் கீழுள்ள திணைக்களங்களை மத்தியின் கீழ் கொண்டுவரும் இத்தகைய சட்டவிரோத, ஜனநாயக விரோத நடவடிக்கைகளை உடனடியாகக் கைவிட வேண்டும். தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களையும் உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு முழுமையாக வழங்க முன்வரவேண்டும்.

மாகாணசபைகளை வெறும் அலங்காரப் பொம்மைகளாக மாற்றிவிட்டு நடத்தப்படும் எந்தவொரு தேர்தலும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்குத் தீர்வாகாது. அரசாங்கம் உடனடியாக மாகாணசபைகளுக்குரிய அதிகார வரம்புகளை உறுதிப்படுத்தி, இழுத்தடிப்புச் சாக்குகளைத் தூக்கியெறிந்துவிட்டு, உடனடியாக மாகாணசபைத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். உண்மையான ஜனநாயகம் என்பது கொழும்பில் மட்டும் அதிகாரம் குவிந்திருப்பதில் இல்லை, அது மாகாணங்களின் சுயாட்சியில் தான் தங்கியுள்ளது என்பதைத் திசைகாட்டி அரசாங்கம் உணர்ந்து செயற்படவேண்டிய தருணமிது.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com







## பொய்யாமொழி

**ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து**
**அழுக்காறு இலாத இயல்பு**

**பொருள்:**
ஒருவன் தன் நெஞ்சில் பொறாமை இல்லாமல் வாழும் இயல்பைத் தனக்கு உரிய ஒழுக்கநெறியாகக் கொண்டு போற்ற வேண்டும்.






# அபாயக் கட்டம் நோக்கி நகரும் டெங்குத்தொற்று

*3 நாள்கள் விசேட ஒழிப்புத் திட்டம்*

**கொழும்பு, ஜூலை 3**
**நாட்டில் டெங்குப் பரவல் அதிகரித்து வரும் சூழலில், நேற்று முதல் மூன்று நாள்களுக்கு நாடு தழுவிய ரீதியில் விசேட டெங்கு ஒழிப்புத் திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.**

பொதுநிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் வழிகாட்டலின் கீழ், "தூய்மையான இலங்கை" வேலைத்திட்டத்துடன் இணைந்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. நாடு முழுவதிலும் உள்ள மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் அதிகாரிகள் இந்த விசேட ஒழிப்பு நடவடிக்கையில் பங்கெடுக்கவுள்ளதாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டில் இதுவரை நாடு முழுவதும் 55,406 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், மேல் மாகாணத்திலேயே அதிகளவாக 21,565 பாதிப்புகள் பதிவாகியுள்ளன. அத்தோடு, அதிக ஆபத்துள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளின் எண்ணிக்கை 124 ஆக அதிகரித்துள்ளது.

அதிகரித்து வரும் இந்தத் தொற்றைக் கட்டுப்படுத்த, பொதுமக்கள் தங்களது வீடுகள் மற்றும் சுற்றாடலைத் தூய்மையாக வைத்திருக்குமாறு சுகாதாரப் பிரிவினர் அவசரமாக அறிவுறுத்தியுள்ளனர். (எ-இ)

# டெங்குத்தொற்று மரணங்கள் 35

கொழும்பு, ஜூலை 3
நாட்டில் டெங்குத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 35 ஆக அதிகரித்துள்ளது. டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் மட்டும் 1025 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். (எ-இ)




# களனி வழித்தடத்தில் ரயில் சேவை நிறுத்தம்

கொழும்பு, ஜூலை 3
இயந்திர வலு பற்றாக்குறை காரணமாக, களனி வழித்தடத்திலான இரண்டு ரயில் சேவைகள் மறு அறிவிப்பு வரும் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. கொழும்புக் கோட்டையிலிருந்து மாலை 4 மணிக்கு அவிசாவளை நோக்கிப் புறப்படும் ரயிலும், மறுநாள் காலை 5:55 மணிக்கு அவிசாவளையிலிருந்து கொழும்புக் கோட்டைக்கு இயக்கப்படும் ரயிலும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. காரியாலய ஊழியர்களும் நாளாந்தப் பயணிகளும் பெருமளவில் பயணிக்கும் இத்தகைய பரபரப்பான நெருக்கடிமிக்க நேரங்களில் இந்த ரயில் சேவைகள் திடீரென இரத்துச்செய்யப்பட்டுள்ளதால், பயணிகள் நாளுக்கு நாள் கடும் அசௌகரியங்களுக்கும் பெரும் பாதிப்புகளுக்கும் உள்ளாகி வருவதாக பயணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-இ)

# வீதி விபத்துகளால் நாளாந்தம் 30 சாவுகள்

கொழும்பு, ஜூலை 3
இலங்கையில் பல்வேறு விபத்துகள் காரணமாக நாளாந்தம் சராசரியாக 30 பேர் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சு அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது. கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், சுகாதார அமைச்சின் தொற்றா நோய்ப் பிரிவின் சமூக மருத்துவ விசேட நிபுணர் மருத்துவர் சமித்த சிறித்துங்க இந்த விவரங்களை வெளிப்படுத்தினார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
நாட்டில் ஒவ்வொரு 3 மணித்தியாலங்களுக்கும் சராசரியாக 4 பேர் விபத்துகளால் உயிரிழப்பதுடன், ஆண்டுதோறும் 8,000 முதல் 10,000 வரையான மரணங்கள் பதிவாகின்றன. பொதுமக்கள் பொதுவாக வீதி விபத்துகளை மட்டுமே பிரதானமாகப் பேசுகின்றனர். ஆனால், உயரமான இடங்களிலிருந்து கீழே விழுதல், நீரில் மூழ்கல், மின்சாரத் தாக்குதல்கள் மற்றும் விஷப்பாம்புக்கடி போன்ற அதிகம் பேசப்படாத, தடுக்கக்கூடிய காரணங்களினாலேயே பெருமளவிலான உயிர்கள் பலியாகின்றன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

**நாளை** சனிக்கிழமை-ஆனி 19
04.07.2026
சுபநேரம் : 02.57 – 04.27
ராகுகாலம் : 08.57 – 10.27


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 3

வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்களத்தின் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்றன் தரம் III, இல்லத்தாய் தரம் III, உதவி மேற்றன் தரம் III, உதவி விடுதிக் காப்பாளர் தரம் III, உதவி இல்ல ஆசிரியர் / ஆசிரியை தரம் III, தொழிற்பயிற்சி போதனாசிரியர் தரம் III ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கல்வித்தகைமைகள், வயது எல்லை, பரீட்சை விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் உள்ளிட்ட மேலதிக விவரங்களை வடக்கு மாகாணசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.np.gov.lk இல் பார்வையிடமுடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் இன்று (2026.07.03) ஆகும். தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் தாமதமின்றி இணையத்தள முகவரியூடாக விவரங்களைப் பெற்று, தங்களின் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். (ச)



# மழலைகள் மகிழ்களவிழா

முல்லைத்தீவு, ஜூலை 3

கள்ளப்பாடு வடக்குப் பகுதியில் அமைந்துள்ள றோயல் லீட் முன்பள்ளியின் மழலைகள் மகிழ்களவிழா, கள்ளப்பாடு பொதுநோக்கு மண்டப வளாகத்தில், கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் நீர்நிரப்புதல், நிறம் தெரிதல், ஓட்டம், பாடசாலைக்குத் தயாராதல், இசைவும் அசைவும் உள்ளிட்ட மழலைகளின் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகளில் பங்கேற்ற மழலைகளுக்குப் பரிசில்களும், வெற்றிச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்துகொண்டார். (க-246)

# INVITATION FOR BIDS 2026/06
## Valikamam South Pradeshiya Sabha, Chunnakam

**Performance – Based Capital Grants for Revenue Generation Project-2026 & Council Fund**

1. The **Chairman, Divisional Procurement Committee (DPC)**, on behalf of the, **Chairman, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.

2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)**.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
**"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 if the contract amount exceeds Rs.5.0 million".**

4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Contract data, bidding data for **SBD1 Document.**

5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs. (T.P:021-224-0017, E mail – worksvsps@gmail.com )

6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Divisional Procurement Committee, Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees** Rs.3,500.00 only. The method of payment will be by cash.

7. Bids (Original & Duplicate) must be delivered to the **Chairman, Divisional Procurement Committee, Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam on or before 10.30 a.m as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder' srepresentatives who choose to attend at Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam**

8. **Pre-Bid Conference will be held at Conference Hall, Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam, commencing at 10.00 AM as stated in table above.**

| | |
|---|---|
| **Document Issuing/Purchasing Period** | **From 2026.07.03 - 2026.07.16** |
| **Pre – Bid Conference** | **At 10.00 A.M On 2026.07.10** |
| **Closing and Opening of Bid** | **At 10.30A.M on 2026.07.17** |

| S. No | Bid ID | Description of Work | Estimate Cost – Civil cost (Rs.Mn) | Contract Period | CIDA /ICTAD Grade & Specialty/ Eligibility | Bid validity Period | Required Bid Security / Bank Draft/ Security Deposit | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Amount | Validity Period |
| 01 | NP/14/41(15)/02/05/ PBCG/ 2026/01 | Establishment & Construction of Testing and Quality Assurance Laboratory | 10.93 | 119 Days | C7, C6 and C5 (Building) | 01.10.2026 | 110,000.00 | 29.10.2026 |

**Chairman,**
**Divisional Procurement Committee,**
**Valikamam South Pradeshiya sabha,**
**Chunnakam.**

03.07.2026

(cs.477771)(N-1)

# பொங்கல் உற்சவம்

யாழ்., ஜூலை 3

நீர்வேலித் தெற்கு மனோன்மணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த ஆனிப் பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு சிறப்பு அபிசேஷகத்துடன் இடம்பெறும். (க-17)

**Recovery Officer Vacancy**
**அறவீட்டு அலுவலர்**
வடக்கு, கிழக்கு & நாடு பூராவும்
முழுநேரம் / பகுதி நேரம்
ஆண் / பெண்
- வயது - 25-55
- க.பொ.த. சா / தரம்
- மோட்டார் சைக்கிள் இருக்க வேண்டும்

074 375 2682
074 033 9568
074 253 7694

மாத வருமானம் LKR 100,000+
(செயற்பாட்டின் அடிப்படையில்)
(cr.477801) N

# எட்டாம் ஆண்டு திதி நினைவஞ்சலி

தோற்றம்
12 . 03 . 1925



மறைவு
03 . 07 . 2018

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும்
கொக்குவில் மற்றும் அன்னசத்திர ஒழுங்கையை
வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் வேலுப்பிள்ளை செல்லத்துரை**

மறைந்தும் மறையாது என்றென்றும்
எம் மனங்களில் நிறைந்தவர் அப்பா!
கண்முன்னே வாழ்ந்த காலம் கண்ணிமைக்கும் நேரத்தில்
கனவாகிப் போனதே அப்பா!
ஏழு ஆண்டுகள் கழிந்தாலும் உங்கள்
நினைவே நிழலாய் அமைந்து விட்டதே அப்பா!
குடும்பத்தலைவரின் சாந்திக்கு இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்

(cs.61789)(N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 . 10 . 1951

மறைவு 21 . 06 . 2019

அமரர்

## செல்லையா சிவலிங்கம்

திதி: சதுர்த்தி (03.07.2026

அவர்களின் ஏழாம் ஆண்டு நிகழ்வு இன்று (03.07.2026) வெள்ளிக்கிழமை அவரது நினைவாக அஞ்சலி செலுத்துகின்றோம்.

இல.55, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 376 8952

மைதிலி நகை மாடம் (PVT) Ltd.
89 V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(cr 47778) (N-1)




# சுப்பிரமணிய வித்தியில் சமூக வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்.தேசிய கல்வியிற் கல்லூரி ஆசிரிய மாணவர்களின் பாடசாலைச் சமூக வேலைத்திட்டம், இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. அதிபர் தி. அபராஜிதன் தலைமையில் பழைய மாணவர்களின் அனுசரணையுடன் இடம்பெற்ற நிகழ்வில், தென் மராட்சி கல்வி வலய வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் மற்றும் தேசிய கல்வியிற் கல்லூரியின் 66 ஆசிரிய மாணவர்கள் மற்றும் 12 விரிவுரையாளர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் மாதிரி கற்பித்தல் செயற்பாடு, பௌதீக வளத்தை அழகுபடுத்தும் செயற்பாடு, கற்பித்தல் சாதனத் தயாரிப்பு, இணைபாடவிதான விருத்திச் செயற்பாடு மற்றும் மாணவர்கள் மற்றும் சமூகத்துக்கான சமகால நிலைமை தொடர்பான நாடக அரங்காற்றுகை என்பன இடம்பெற்றன. (க-159)


# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திரு. S.P. நடராசா

(அண்ணா தொழிலக அதிபர்)

03.07.2026

ஆண்டுகள் பல ஆனாலும்
உங்கள் நினைவுகள் - நம் நெஞ்சில்
நீங்கள் இட்ட வழியில்
உங்கள் ஆசியுடன்
தொடர்ந்து பயணிப்போம்

அண்ணா தொழிலகம்
ஊழியர்களும், உரிமையாளர்களும்.

(cr.47779)

# மரண அறிவித்தல்



தோற்றம் 31 . 03 . 1944

மறைவு 02 . 07 . 2026

**அமரர் இராஜஇராஜேஸ்வரி அம்மா கனகசபாபதி (அக்கம்மா)**

அரசகேசரி விநாயகர் வீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபாபதி இராஜஇராஜேஸ்வரி அம்மா (அக்கம்மா) அவர்கள் நேற்று (02.07.2027) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை கனகசபாபதி (முன்னாள் உதவி அரசு அதிபர், ஒட்டிசுட்டான்) அவர்களின் பாசமிகு மனைவியும், A.K வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், A.K.V கணேஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற பரமேஸ்வரன் ஞானேஸ்வரிதேவி, இரத்தினேஸ்வரி, A.K.V குகனேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான செ.சோமசுந்தரம், நா.வாலாம்பிகை, மற்றும் நாகேஸ்வரி, சிவராமலிங்கம் (ஓய்வுபெற்ற கட்டட திணைக்களம் பிரதம லிகிதர்), சரஸ்வதி, கமலாம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், யமுனா, பரமேஸ்வரன் (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற சிவலிங்கம் (ரத்தினா மோட்டோர்ஸ்), புஸ்பராணி, காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, நாகலிங்கம், கந்தையா (T.O), பாலசிங்கம் (மருந்துக் கலவையாளர்), தேவமகேஸ்வரன் (கிளி. AGA office) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், ரமேஷ் (கட்டட கலைஞர்), சுமதி செல்வேந்திரா (அவுஸ்ரேலியா), கவிதா டினேஸ்குமரன் (HNB கிளிநொச்சி), பிருந்தாசீலன் (கனடா), ஜீவனா விஸ்னுவர்தனன் (ஆசிரியர் உயர்ப்புலம் மெதடிஸ்), மனோஜிதன் (ஹரி கென்ஸ்ரக்சன், வவுனியா) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், சுதன் (கனடா), நிலானி நந்தன் (அவுஸ்ரேலியா), ஜெயன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் நீர்பாசன பொறியியலாளர் அலுவலகம் கிளிநொச்சி), ஜெனனி பிரதீபன், நிஷானி இலங்கேஸ்வரன் (நியூஸ்லாந்து), கேமாலினிகங்கா ஜீவன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.**

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
(A.K.V குகனேஸ்வரன் தம்பி)
ஈஸ்வர வாசா, அரசகேசரி விநாயகர் வீதி, நீர்வேலி
077 370 0897, 021 223 0189

(CS/32084) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்ணய விலையை மீறி நெல் கொள்வனவு: வர்த்தகர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை

## அமைச்சர் எச்சரிக்கை

**முல்லைத்தீவு,ஜூலை 3**

**தற்போது சிறுபோக நெல் அறுடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அரசாங்கம் நிர்ணயித்த விலையை மீறி, நெல்லைக் கொள் வனவு செய்யும் தனியார் வர்த்தகர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்தார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் நீராவி ஊற்றுக்குளத்தில் இடம்பெற்ற தேசிய வேலைத்திட்ட நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணம் போர் காரணமாக சகல விடயங்களி லும் கடும் பாதிப்புகளையும், பின்னடைவுகளையும் சந்தித்திருந்தது. இங்குள்ள நீர்ப்பாசனக் கட்டமைப்பும் முழுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளது. இதனை மறுசீரமைக்கும் நோக்கில் குளங்களின் கட்டமைப்பை வலுப்படுத்த அரசாங்கம் தீர்மானித்தது.

அதன் காரணமாகவே இந்தத் தேசிய வேலைத்திட்டத்தை முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து நாம் ஆரம்பித்துள்ளோம். பெரும்போகத்தின் போது அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட உத்தரவாத விலைக்கு விவசாயிகள் தமது நெல்லை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு உரிய காலத்தில் வழங்க வில்லை. நெற்சந்தைப்படுத்தல் சபையால் தொடர்ச்சியாக நெல்லைக் கொள்வனவு செய்யமுடியாது. அறுவடைக் காலத்தில் மாத்திரமே கொள்வனவு செய்யமுடியும். இங்குள்ள நெற் களஞ்சியசாலைகளின் வசதிகளை விரிவுபடுத்தவேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். தற்போது சிறுபோக அறுவடைகள் ஆரம்பமாகியுள்ள நிலையில், நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக, அவற்றை நியாய விலையில் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனவே விவசாயிகள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். நெல்லைக் கொள்வனவு செய்யும் தனியார் அரிசி ஆலை உரிமையாளர்களுடனும் நாம் சந்திப்புகளை நடத்தவுள்ளோம். நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்வதில் அவர்களுக்குள்ள பிரச்சினைகள் என்ன என்பதைக் கேட்டறிந்து, விவசாயி களுக்கு நியாய விலையைப்பெற்றுக்கொடுப்போம். அதே வேளை வடக்கு மாகாண மக்களின் விவசாயக் காணிகள் வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பல தடவைகள் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. இதுதொடர்பில் அமைச்சரவையில் ஆராயப்பட்டு, மாவட்டச் செயலர்கள் தலைமையில் விசேட குழுக்கள் அமைக்கப்பட்டு, அந்தக் காணிகளை விடுவிப்பதற்கான செயன்முறைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றார். (க-55)

## INVITATION FOR BID 2026
## OFFICE OF THE REGIONAL ASSISTANT COMMISSIONER OF LOCAL GOVERNMENT

1. The Chairman, Regional Procurement Committee , on behalf of the Regional Assistant Commissioner , Office of the Regional Assistant Commissioner of Local Government , Sivan Pannai Road, Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the Construction work described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below
   **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 if the estimated cost exceeds Rs.5 million,"**
4. Qualification's requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in the **Bidding data & Contract Data** (Section 5) for SBD 1 Documents.
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **03/07/2026 to 15/07/2026** during **09:00 hrs and 15:00 hrs.**
6. 6 .A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application, for Reconstruction of Pullaveli Road at Maruthankerny (J/433). **The Chairman, Point Pedro Pradeshiya Sabha , Puloly (T.P:021 2263276, email:pointpedrops@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee ,Office of the Regional Assistant Commissioner of Local Government , Sivan Pannai Road, Jaffna on or before 10:30:00 AM as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bidswill be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Office of the Regional Assistant Commissioner of Local Government, Sivan Pannai Road, Jaffna** commencing at 10:30:00 AM as stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **Document Issuing/Purchasing Period** | | | | **From 03/07/2026 To 15/07/2026** | | | |
| | **Pre-Bid Conference** | | | | **At 10:30:00 AM on 10/07/2026** | | | |
| | **Closing and Opening of Bids** | | | | **At 10:30:00 AM on 16/07/2026** | | | |
| **Bid ID** | **Description of Work** | **Estimated Cost (Rs.) In Million (without VAT)** | **Contract Period (Days)** | **Grade Required** | **Non-Refundable Fee (Rs.)** | **Required Bid Security/ Bank Draft/ Security Deposit** | | **Bid Validity Period** |
| | | | | | | **Security Amount (Rs.)** | **Validity Period** | |
| PSDG/NP/ PPDPS/ Dit-1 / 2026/01 | Reconstruction of Pullaveli Road at Maruthankerny (J/433) | 19.91 | 105 | C7, C6 and C5 (Highway) | 3,500.00 | 199,500.00 | 30/10/2026 | 77 Days |

**Chairman**
**Regional Procurement Committee,**
**Office of the Regional Assistant Commissioner of Local Government,**
**Sivan Pannai Road, Jaffna.**
**Date - 03-07-2026**

(ஏ47783) (N-1)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

சாவகச்சேரி மட்டுவில் அம்பலாந்துறை வேம்படி கந்தசுவாமி திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 மணி முதல் 10.55 மணி வரையுள்ள சுப நேரத்தில் இடம்பெறும். நாளை சனிக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 5 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் நடைபெறும். (க)

## மாணவர் நாடளுமன்ற முதல் அமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 3

கெழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின், மாணவர் நாடாளுமன்ற அங்குரார்ப்பணமும், முதல்அமர்வும், இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 12 மணிக்கு அதிபர் க. தவகிஸ்வரன் தலைமையில் நடைபெறும். (க)

## இரத்ததான முகாம்

*யாழ்ப்பாணம், ஜூலை 3*

*மக்கள் வங்கியின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மக்கள் வங்கி யாழ் பிராந்தியமும் இலங்கை வங்கி ஊழியர் சங்கமும் இணைந்து நடத்தும் மாபெரும் இரத்ததான முகாம் மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை இடம்பெறவுள்ளது. (ச-41)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இந்திய நிறுவனங்களின் தடையை நீக்கிய ட்ரம்ப்

**நியூயோர்க், ஜூலை 3**

**ரஷ்யாவுடன் வர்த்தகத் தொடர்புகளைப் பேணியதாகக்கூறி, 4 இந்திய நிறுவனங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா நீக்கியுள்ளது.**

2022ஆம் ஆண்டு உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்த போரையடுத்து, அந்நாட்டிற்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் அமெரிக்கா பல்வேறு தடைகளை விதித்தது. இதன் ஒரு கட்டமாக, ரஷ்யாவுடன் வர்த்தகத்தில் ஈடுபட்ட 19 நிறுவனங்கள் மற்றும் இரண்டு தனிநபர்கள் உட்பட 21 இந்தியத் தரப்புகள் மீது தடைகள் விதிக்கப்பட்டன.

இந்திய மத்திய அரசின் தொடர் முயற்சிகளின் விளைவாக, இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது 4 நிறுவனங்கள் மீதான தடைகள் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளன. ஹைதராபாத்தைச் சேர்ந்த ஆர்.ஆர்.ஜி. இன்ஜினியரிங் டெக்னாலஜிஸ் மற்றும் லோகேஷ் மெஷின்ஸ், அகமதாபாத்தைச் சேர்ந்த கேலக்ஸி பியரிங்ஸ், டெல்லியைச் சேர்ந்த சௌர்யா ஏரோநாட்டிக்ஸ் ஆகிய நிறுவனங்களே இத்தடையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

இத்தடை நீக்கத்தின் மூலம் இந்த இந்திய நிறுவனங்கள் மீண்டும் தங்களது சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளைத் தடையின்றி முன்னெடுக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (எ-இ)

## உக்ரைனின் மீது ரஷ்யா தாக்குதல்

கீவ், ஜூலை 3

உக்ரைன் தலைநகர் கீவ் மீது நேற்றுமுன்தினம் இரவு ரஷ்ய இராணுவம் நடத்திய ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களில் 8 பேர் உயிரிழந்ததுடன், 34 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நகரின் 28 இடங்களில் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதுடன், குடியிருப்புக் கட்டடங்கள் மற்றும் பொதுக்கட்டமைப்புகளே பெருமளவில் இலக்கு வைக்கப்பட்டுள்ளன என்று உக்ரைன் நகர நிர்வாகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, உக்ரைன் இராணுவம் அண்மையில் ரஷ்யாவின் 50க்கும் மேற்பட்ட பெரிய எரிபொருள் உற்பத்தித் தொழிற்சாலைகளைக் குண்டு வீசித் தகர்த்திருந்தது.

இதன் காரணமாக உலகிற்கு எரிபொருள் வழங்கும் வல்லமை கொண்ட ரஷ்யாவில் தற்போது வரலாறு காணாத வகையில் பெற்றோல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள பின்னணியில் இத்தாக்குதல் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## விமான விபத்தை மூடிமறைக்கும் பீஜிங்

பீஜிங், ஜூலை 3

சீனத் தலைநகர் பீஜிங்கில் 109 மாடிகளைக் கொண்ட 'CITIC' கோபுரத்தில் சிறிய ரக வானூர்தியொன்று மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தின் விபரங்களை சீன அரசு மூடிமறைப்பதாக சர்வதேச ஊடகங்கள் குற்றம் சுமத்தியுள்ளன. கடந்த வெள்ளிக்கிழமை சீன கம்யூனிஸ்ட் கட்சி தலைமையகத்துக்கு அருகில் நடந்த இவ்விபத்தில் விமானி பலியானதுடன் 13 பேர் காயமடைந்தனர். இது குறித்து சீன அரச ஊடகம் மிகச்சிறிய அறிக்கையை மட்டுமே வெளியிட்டுள்ளதுடன், விபத்துத் தொடர்பான காணொளிகள் மற்றும் புகைப்படங்களை இணையப் பக்கங்களிலிருந்து அதிகாரிகள் நீக்கியுள்ளனர்.

கடுமையான பாதுகாப்பு நிலவும் பீஜிங்கிற்குள் இவ்வானூர்தி எவ்வாறு நுழைந்தது என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், இலகு ரக வானூர்தி சேவைகளுக்கு தற்காலிகத் தடையும், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. (எ-இ)



## இடிபாடுகளில் சிக்கிய சிறுவன் ஆறு நாள்களின் பின்னர் மீட்பு

கராகஸ், ஜூலை 3

வெனிசுலாவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தின் இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த 3 வயதுச் சிறுவன், 6 நாள்களுக்குப் பிறகு அதிசயமாக உயிருடன் மீட்கப்பட்டுள்ளான்.

கிளைபர் மொரான் என அடையாளம் காணப்பட்டுள்ள இந்தச் சிறுவன், லாகுவைரா மாகாணத்தில் உள்ள இடிந்த கட்டடப் பகுதிக்குள் இருந்து, அங்கு தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்த ஜோர்தான் நாட்டு மீட்புக் குழுவினரால் பத்திரமாக மீட்கப்பட்டார். சிறுவனுக்கு உடனடி முதலுதவி அளிக்கப்பட்டு, கராகஸ் நகரில் உள்ள மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தற்போதுசிறுவனின்உடல்நிலை சீராக உள்ளதாக வெனிசுலா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதேவேளை, இந்த நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு உணவு, தற்காலிக தங்குமிடங்கள் மற்றும் அத்தியாவசிய நிவாரணப் பொருள்கள் அவசரமாகத் தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளதுடன், சர்வதேச சமூகத்தின் உதவியையும் கோரியுள்ளது. (எ-இ)

## ரஷ்யாவின் தாக்குதலில் 12 உக்ரைனியர்கள் சாவு

கீவ், ஜூலை 3

உக்ரைனின் பல்வேறு பகுதிகளை இலக்குவைத்து ரஷ்யா கடந்த திங்கட்கிழமை நடத்திய ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களில் 12 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

உக்ரைனின் டினிப்ரோ, சப்ரோசினியா மற்றும் சுமி ஆகிய முக்கியமான நகரங்களில் நடத்தப்பட்ட இந்தக் கொடூரத் தாக்குதல்களில் சிக்கி சுமார் 40 பேர் படுகாயமடைந்துள்ளனர். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஆயுத உதவிகளுடன், உக்ரைன்-ரஷ்யா இடையிலான போர் 1,589 ஆவது நாளாக நீடித்து வருகிறது. இந்த இருதரப்புப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மேற்கொண்ட அமைதிப் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன. இரு நாடுகளுக்கும் இடையே சமரசம் ஏற்படாமல் தொடர்ந்துதாக்குதல்கள்தீவிரமடைந்து வருகின்றமை பிராந்தியத்தில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ-இ)



## அக்ராவில் கடும் மழை: 13 பேர் உயிரிழப்பு

அக்ரா, ஜூலை 3

கானாவின் தலைநகரான அக்ராவில் பெய்த கொடூர கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி, சுமார் 13 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அந்நாட்டுத் தீயணைப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இடி மின்னலுடன் கூடிய இந்தக் கனமழையால் நகரின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதற்கிடையே, அந்தப் பகுதியை நோக்கி பெரும் புயல் ஒன்று வரவிருப்பதாகவும், இதனால் மழை மேலும் நீடிக்கலாம் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அவசர எச்சரிக்கை விடுத்துள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களைப் பாதுகாப்பான இடங்களில் தங்கவைப்பதற்கான அவசரப் பணிகளை அந்நாட்டு அரசாங்கம் தீவிரப்படுத்தியுள்ளது. (எ-இ)



## பெற்றோலின் விலையை குறைக்கக்கோரும் ட்ரம்ப்


வொஷிங்டன், ஜூலை 3

அமெரிக்க மக்களுக்காகப் பெற்றோல் விலையை உடனடியாகக் குறைக்க வேண்டும் எனச் சில்லறை விற்பனை நிலையங்களுக்கு அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தற்போது ஒரு பேரல் மசகு எண்ணெய் 68 டொலராகக் குறைந்துள்ள நிலையிலும், பெற்றோல் விலை குறைக்கப்படாததைச் சுட்டிக்காட்டி தனது 'ட்ரூத்' சமூக வலைத்தளப் பக்கத்தில் அவர் பதிவிட்டுள்ளார். அதில், "சில்லறை விற்பனையாளர்கள் உடனடியாக விலையைக் குறைத்துச் சரியான முடிவை எடுக்கவேண்டும். தவறினால் பெரும் பிரச்சினையைச் சந்திக்க நேரிடும். ஒரு கலன் பெற்றோல் விலையை 2.50 டொலராக இலக்கு வையுங்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கலிபோர்னியாவில் வசூலிக்கப்படும் அதிகப்படியான வரிகளைக் கடுமையாக விமர்சித்துள்ள ட்ரம்ப், சொந்த அரசாங்கத்தின் அபத்தமான வரிகளால் மக்கள் துன்புறுத்தப்படுவதை அமெரிக்கா ஒருபோதும் விரும்பாது என்றும், இந்த வரி விதிப்பை உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



அகில இலங்கை ரீதியில் கொழும்பில் இடம்பெற்ற ஆண் அழகன் போட்டியில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ்.கோகுலவாசன்(75 கிலோ) நான்காம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர் நீர்வேலி தெற்கைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-17)



# விபத்துகளைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜுலை 3

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்துவரும் வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மாவட்டச் செயலர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், வீதி விபத்துகளைக் குறைத்தல், இளம் சமூகத்தினர் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல், எதிர்காலத்தில் எவ்வாறான திட்டங்களை முன்னெடுக்கலாம் என்பது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. கலந்துரையாடலில் பொலிஸ் உயர் அதிகாரிகள், வீதிப் போக்கு வரத்துப் பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவினர், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர், பிரதேசசபை உள்ளிட்ட துறை சார்ந்த திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (க-55)



நீர்வேலி தெற்கைச் சேர்ந்த தயாளன் கந்தசாமி, உயர் நீதிமன்றில் சட்டத்தரணியாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (க-17)

## VALIKAMAM WEST PRADESHIYA SABHA, CHULIPURAM.

## INVITATION FOR BIDS (IFB) – Line Ministry & PSDG fund 2026

1. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
2. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2026.07.03 until 2026.07.16 from 09:00 hrs to 15:00 hrs.**
3. Qualification requirements are indicated in Section 4 of the Procurement document. Additional details are provided in Schedule (Section 5) for SBD 3 Documents.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of road construction/Building construction for grade mentioned in the table below.
   **" Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"**
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to **The Chairman, Valikamam West Pradeshiya Sabha, Chulipuram (T.P No: 021 225 0144, Fax No: 021 225 0144) during the period from 2026.07.03 until 2026.07.16 from 09:00 hrs to 15:00 hrs. upon payment of a non-refundable fee as mentioned in the table.** The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Local Authority Procurement Committee, Valikamam West Pradeshiya Sabha, Chulipuram at or before 10.00 hrs, 2026.07.17 Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at **Head office, Valikamam West Pradeshiya Sabha, Chulipuram** commencing at **10.00 am on 2026.07.09**
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.

| | |
|---|---|
| **Document Issuing/Purchasing Period** | **2026.07.03 until 2026.07.16** |
| **Pre-Bid Conference** | **At 10.00 A.M on 2026.07.09** |
| **Closing and Opening of Bids** | **At 10.00A.M on 2026.07.17** |

| S No | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee | Validity Period -days | Bid Validity Date | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | Bid Security Amount | Bid Security Validity Date |
| 01 | Construction of small bridge Ponnalai Cemetery road -1 NP/14/41(17)/02/LM/01/2026 | 2.619 | 84 Days | C9, C8 & C7 Roads | 3000.00 | 49 days | 04.09.2026 | 27,000.00 | 02.10.2026 |
| 02 | Renovation of Siththankerney sivan kovil road NP/14/41(17)/02/PSDG/14/2026 | 3.750 | 84 Days | C9, C8 & C7 Roads | 3000.00 | 49 days | 04.09.2026 | 38,000.00 | 02.10.2026 |

**Chairman,**
**Local Authority Procurement Committee,**
**Valikamam West Pradeshiya Sabha,**
**Chulipuram**

03.07.2026



# ஆசிரியர் கலாசாலை வாராந்த ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஜுலை 3

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சர்வதேசக் கூட்டுறவு தினத்தைச் சிறப்பிக்கும்வகையில் வாராந்தச் சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி.சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.செ. உதயகுமார் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இதன்போது எளிய மனிதர்களின் ஆயுதம் கூட்டுறவு எனும் காணொளி கலாசாலையின் ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜனால் தயாரிக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டது. கலாசாலையின் வர்த்தகக் கல்விநெறி ஆசிரிய மாணவன் எம்.எஸ்.ஹீபத்துல்லா 'கூட்டுறவும் நாட்டுறவும்' எனும் தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார். (சு-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனங்கள் இறக்குமதிக்கு 1,071 மில்லியன் டொலர் செலவு

கொழும்பு, ஜூலை 3

2026ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் வாகன இறக்குமதிக் காக மட்டும் 1,071 மில்லியன் அமெ ரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித் துள்ளது.

எனினும், மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக நாட்டின் வெளிநாட் டுத்துறை தற்போதும் கடுமையான அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

நடப்பு 2026ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் நாட்டின் பொரு ளாதாரத்தின் வெளிநாட்டுத் துறை யின் செயற்றிறன் குறித்த அறிக்கை யைச் சமர்ப்பிக்கும் போதே மத்திய வங்கி இதனைத் தெரிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டின் இறுதிப் பகுதி யுடன் ஒப்பிடுகையில், 2026ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதிக்கு இடை யில் அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு 7.9 சத வீதம் சரிவடைந்துள்ளது.

ஏற்றுமதி வருவாயை விடவும் நாட்டின் இறக்குமதிச் செலவினம் மிக வேக மாக அதிகரித்ததன் காரணமாக, வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந் துள்ளது.

கடந்த 2025ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 2.7 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்த வர்த்த கப் பற்றாக்குறை, 2026ஆம் ஆண் டின் இதே காலப்பகுதியில் 4.7 பில்லி யன் அமெரிக்க டொலராக கணி சமாக அதிகரித்துள்ளது. 2026ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் வாகன இறக்குமதிக்காக மட்டும் 1,071 மில்லியன் அமெரிக்க டொலர் செல விடப்பட்டுள்ளது.

கடந்த மே மாதத்தில் மட்டும், எரிபொ ருள் இறக்குமதிச் செலவினம் ஆண்டு அடிப்படையில் 112 சதவீதம் அதிக ரித்து, 536 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

---

## மடுத்...

பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண் டகை தலைமையில், அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நிஷாந்த சாகர ஜெயமன்ன ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் இம் மானுவேல் பெர்னாண்டோ ஆண் டகை, மடு பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட் தந்தை கிறிஸ்துநேசன் அடிகளார் ஆகியோர் இணைந்து திருவிழாத் திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

திருவிழாத் திருப்பலியை தொடர்ந்து திருச்சொரூப பவனியும், திருச்சொரூப ஆசியும் இடம்பெற்றன. நாட்டின் பல பகுதிகளில் இருந்து ஆயிரக் கணக் கான மக்கள் இந்தப் பெருவிழாவில் கலந்துகொண்டனர். (அ-ம-55)

## மணற்காட்டில்...

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதி யிலிருந்து குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை நோக்கித் தனது இரண்டு பிள்ளைகளுடன் பய ணித்துக் கொண்டிருந்த தாயொருவ ரின் மோட்டார் சைக்கிளும், மருதங் கேணி நோக்கிப் பயணித்த இரண்டு ஆசிரியர்களின் மோட்டார் சைக்கி ளுமே இவ்வாறு விபத்துக்கு உள்ளா கின.

இதையடுத்து ஐந்து பேரும் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவம னையில் சேர்க்கப்பட்டனர். அவர்க ளில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னைக்கு மாற்றப்பட்டனர். மருதங்கே ணிப் பொலிஸார் மேலதிக விசார ணைகளை முன்னெடுத்து வருகின்ற னர். (அ-ம-66)

## சந்திரசேன...

கல் செய்யப்பட்ட இந்தக் குற்றப்பத்தி ரிகை, கொழும்பு மேல் நீதிமன்ற நீதி பதி ரவீந்திர பிரேமரத்ன முன்னிலை யில் வாசித்துக் கையளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, பிரதிவாதியான முன்னாள் அமைச்சரை 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 10 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் செல்ல நீதிபதி அனுமதி வழங்கினார். அத்துடன், இந்த வழக்கை எதிர்வரும் ஜூலை மாதம் 22ஆம் திகதி மீண்டும் விசார ணைக்கு எடுத்துக்கொள்ளுமாறும் அவர் உத்தரவிட்டார்.

கடந்த 2014ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் 2014 டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள், அநுராதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்குவதற்காக அர சாங்கத்தின் செலவில் இறக்குமதி செய்யப்பட்ட 36 ஆயிரம் கிலோகி ராம் சோள விதைகளை தனது அரசி யல் ஆதரவாளர்களுக்குப் பகிர்ந்த ளித்தார் என்ற குற்றச்சாட்டு அவர்மீது முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (அ-ம)

## கைது...

ஒடுக்குவதற்காகவே அரசாங்கம் திட் டமிட்ட முறையில் கைது நடவடிக் கையை முன்னெடுத்து வருகின்றது. கைது நடவடிக்கைகள் மூலம் நாமல் ராஜபக்சவின் அரசியற் பயணத்தை முடக்க முடியும் என்பது அரசாங்கத் தின் எண்ணமாக உள்ளது. நாமல் ராஜபக்ச என்பவர், மஹிந்த ராஜபக் சவின் மகன். எனவே, சிறைச்சாலை களைக் காண்பித்து அவரை அடி பணிய வைக்க முடியாது - என்றார். (அ-ம)

## கூட்டுறவு...

மாவட்ட கூட்டுறவுச் சபை தெரிவித் துள்ளது.

அந்தச் சபையால் அமைச்சர் சந்திர சேகருக்கு அனுப்பி வைத்துள்ள கடி தத்தில் உள்ளதாவது:-

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபி விருத்தி உதவி ஆணையாளராகக் கடமையாற்றும் கி.சந்திரசேகரன் ஓய் வுபெற்றுச் செல்வதற்கு இன்னும் ஆறு மாதங்களே உள்ளன. இவ்வா றான நிலையில், அவருக்குத் திடீர் இடமாற்ற கட்டளை வழங்கப்பட்டுள் ளதாக அறிகின்றோம். இந்த இடமாற் றமானது சந்திரசேகரன் இதுவரை கூட்டுறவுத் துறைக்கு ஆற்றிய பங்க ளிப்பை மலினப்படுத்தும் வகையி லேயே அமைந்துள்ளது.

அத்துடன் இந்த இடமாற்றம் காலத் துக்குக் காலம் கூட்டுறவுத்துறையில் இருக்கும் அரசியற் தலையீட்டின் பிர திபலிப்பாகவும் அமைந்துள்ளது. தங்களின் அரசாங்கத்திலும் இத்த கைய அரசியற் தலையீடுகள் தொடர் கின்றமையை முன்னிட்டு கூட்டுற வாளர்களான நாங்கள் விசனம் அடைந்துள்ளோம். எனவே இந்த இடமாற்றம் தொடர்பில் மறுபரிசீலனை செய்யுமாறு தங்களைக் கோருகின் றோம் - என்றுள்ளது. (அ-ம-26)

## மாகாணசபைத்...

'விவசாயியை அரசனாக்குவோம்' என்றுகூறி ஆட்சிக்கு வந்த தற்போ தைய அரசாங்கம், இன்று விவசாயி களை நரகத்துக்குக் கொண்டுசெல் லும் வேலைத்திட்டத்தை அதிவேக மாக முன்னெடுத்து வருகின்றது. விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு இவர்களிடம் எந்த தீர்வும் இல்லை. மாறாக விவசாயிகளை இழிவுபடுத்தி, ஏளனம்பேசி வருகின்றனர்.

திசைகாட்டி அரசாங்கத்தை மக்கள் வெறுத்து வருகின்றனர். மக்களின் விருப்பத்தை அறிய வேண்டுமாயின் உடனடியாக மாகாணசபைத் தேர் தலை நடத்த வேண்டும். நாட்டில் தற்போதுள்ள சகல பிரச்சினைகளுக் கும் முற்போக்குத்தனமான தீர்வை வழங்குவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம் - என்றார். (அ-ம-இ)

## இறைச்சிக்காக...

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய இடம்பெற்ற மேலதிக விசாரணைகளின் அடிப்ப டையிலேயே குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். பசுவைக் கடத் துவதற்குப் பயன்படுத்தப்பட்ட லொறி யையும் பொலிஸார் கைப்பற்றியுள் ளனர். சந்தேகநபர்கள் மூவரையும் வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்ற னர். (அ-ம-110)

## அர்ச்சுனாவுக்கு...

கல் செய்யப்பட்ட மேற்படி வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் அரச மருத்துவ அதிகா ரியாகப் பணியாற்றி வேளையில் பொதுத் தேர்தலுக்கான வேட்புமனு வைத் தாக்கல் செய்திருந்தார். அரச சேவையிலிருந்து இராஜினாமா செய் யாமல் வேட்புமனுத் தாக்கல் செய்த மையானது நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தை மீறும் செயலாகும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


இந்த வழக்குத் தொடர்பில் நேற்று முன்வைக்கப்பட்ட மேலதிக சமர்ப்ப ணங்களை ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்தே வழக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாத இறுதியில் விசார ணைக்கு உட்படுத்த நீதிமன்றம் தீர் மானித்துள்ளது. (அ-ம-66)

## ஈஸ்டர்...

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர் பான விசாரணைகளை திசைதிருப்பு வதற்கு சதி செய்கின்றனர் என்று முன் னாள் அமைச்சர்களான உதய கம் மன்பில, விமல் வீரவன்ஸ, நாடாளு மன்ற உறுப்பினர் திலித் ஜயவீர உள்ளிட்ட ஆறு பேருக்கு எதிராக அருட்தந்தை ரோகன் சில்வா நீதிமன் றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார். அத்துடன், முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத் தும் வகையில் செயற்பட்டு வருகின் றார் என்றும் அவர் தனது முறைப்பாட் டில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தவழக்குநேற்றுவிசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போது, முறைப் பாட்டாளரான அருட்தந்தை ரோகன் சில்வா சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சுரேன் டி பெரேரா முன் வைத்தசமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிமன்றம், குறித்த ஆறு பேருக்கும் எதிராக முறைப்பாடுகளைப் பதிவு செய்துஉடனடியாகவிசாரணைகளை ஆரம்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய திருக்குறள் எளிமையான உரையும் விளக்கமும் எனும் நூலின் பிரதி நூலாசிரியரால் யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது. இதன்போது நூலாசிரியருடன் யாழ்ப்பாணத் தமிழ்சங்கப் பெருந் தலைவர் வாழ்நாட் பேராசிரியர். அருணாசலம் சண்முகதாசும் உடனிருந்தார். (ச-66)



# பெண்களுக்கான கிளித்தட்டு வல்வைக்கழகம் சம்பியன்!

யாழ்ப்பாணம், ஜூலை 3

வல்வை ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற 'மாபெரும் வல்வெட்டித்துறை கோடைகால பெருவிளையாட்டு விழா 2026' இல் பெண்களுக்கான கிளித்தட்டுப் போட்டியில் வல்வை விளையாட்டுக் கழக அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான கிளித்தட்டுப் போட்டிகளில் அபார திறமையை வெளிப்படுத்திய வல்வை விளையாட்டுக்கழகம் மற்றும் ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் என்பன இறுதிப்போட்டியில் மோதிக்கொண்டன.

இறுதிப்போட்டியில் வல்வை விளையாட்டுக்கழகம் வாகை சூடி சாதனை படைத்தது. இறுதிவரை சளைக்காது வெற்றிக்காக போராடிய ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் இரண்டாவது இடத்தைப் பெற்றது. நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் மூன்றாம் இடத்தைப் பெற்றது. (ச-100)



கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில், தரம் 3 மாணவர்களின் பாரம்பரிய பண்டிகைகளின் உணவுக் கண்காட்சி, பாடசாலை அதிபர் கே. தவகிஸ்வரன் தலைமையில் கடந்த வாரம் இடம் பெற்றது. (கு-17)

**காணி விற்பனைக்கு**

A-9 வீதியில் இருந்து மாம்பழம் சந்திக்கு அருகாமையில் (நாச்சிமார் கோவிலடி) 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 0083 491

(CS 32085)A

**ENGLISH CLASSES**

Zoom அல்லது தனியாகவும் அல்லது குழுவாகவும் வீடு வந்து கற்பிக்கப்படும்.

Students, Workers and for University students

*Grammar *Spoken

T.P: 077 33 14 608

(CS 31126)A

# கடன் தவணையில் அரிசி எதிர்க்கட்சியின் வதந்தியே!

## அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 3

அரச ஊழியர்களுக்கு கடன் தவணை அடிப்படையில் 20 கிலோ அரிசி வழங்குவது தொடர்பில் அரசாங்கம் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். அரச ஊழியர்களுக்கு கார் வழங்குவோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், தற்போது கடனுக்கு அரிசி வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அந்த மட்டத்துக்கு அரச ஊழியர்கள் தள்ளப்பட்டுள்ளனர் என எதிரணி உறுப்பினர்கள் விமர்சனங்களை முன் வைத்துவரு கின்றனர் என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர், மேற்கண்டவாறு கூறினார். அரச ஊழியர்கள் சிலரே இது பற்றி யோசனை முன்வைத்திருந்த னர் என அமைச்சர் வசந்த சமரசிங்க விளக்கமளித்திருந்தார். அரசாங்கம் என்ற வகையில் நாம் அவ்வாறு எந்த முடிவையும் எடுக்கவில்லை. வங்குரோத்தடைந்துள்ள எதிரணிகளுக்கு அரசியல் நடத்துவதற்கு எதுவும் இல்லை என்பதாலேயே, போலிப் பரப்புரை முன்னெடுக் கப்படுகின்றது - என்றார். (ச-44)

முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு

தோற்றம்
26 • 03 • 1947



மறைவு
14 • 07 • 2025

கடந்த 2025.07.14 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் சின்னத்தம்பி அருள்ராசலிங்கம்**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் இன்று 2026.07.03 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குப்பிளான் தெற்கு. (cr. 47776) (N-1) குடும்பத்தினர்

# கடற்படைத் தளபதி கடமைகளைப் பொறுப்பேற்பு

கொழும்பு, ஜூலை 3

இலங்கைக் கடற்படையின் 27ஆவது தளபதியாக வைஸ் அட்மிரல் டேமியன் பெர்னாண்டோ, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நியமிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார். முன்னாள் தளபதி அட்மிரல் காஞ்சன பானகொடவிடமிருந்து கடற்படை மரபுப்படி வாளைப் பெற்றுக்கொண்ட இவருக்கு, 48 கடற்படை வீரர்களின் விசேட அணிவகுப்பு மரியாதை மற்றும் மத ஆசீர்வாதங்களுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. (எ-இ)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media